ரூ.2,000 கோடியில் 'வெற்றி மடிக்கணினி' திட்டம்

முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை, நவ. 7: உயர் கல்வி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை (லேப்டாப்) வழங்கும் வெற்றி மடிக்கணினி திட்டத்தை ரூ.2,000 கோடியில் செயல்படுத்த முதல்வர் ச.ஜோசப் விஜய் உத்தரவிட்டார்.

இதுகுறித்த தமிழக அரசு சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாணவர்களின் முன்னேற்றமே மாநிலத்தின் முன்னேற்றம் என்ற உயர்ந்த நோக்கத்தில், கல்லூரி மாணவர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்த வெற்றி மடிக்கணினித் திட்டத்தைச் செயல்படுத்திட முதல்வர் ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார். இன்றைய எண்ம (டிஜிட்டல்) உலகில், உயர்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினி என்பது இன்றியமையாதது. தொழில்நுட்ப அறிவு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, இணையவழிக் கல்வி, எதிர்கால வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கு மடிக்கணினிகள் பெரிதும் உதவும்.

2026-27-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் வெற்றி மடிக்கணினித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அரசாணை: இதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள், நிதி ஒதுக்கீட்டிற்கு நிர்வாக ரீதியான அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.



நிகழ் 2026-27-ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், பாலிடெக்னிக், தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ), மருத்துவம், கால்நடை மருத்துவம்,மீன்வளம், வேளாண்மை, சட்டம் உள்ளிட்ட பல்வேறு கல்விப் பிரிவுகளில் பயிலும் முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு இளநிலைப் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மாணவர்கள் இந்த திட்டத்தில் பயனடைவர்.

உயர் நிலைக் குழு: இத்திட்டத்தை மிகச் சீரிய முறையில் கண்காணித்து, தொய்வின்றிச் செயல்படுத்திட முதல்வர் தலைமையில் உயர்நிலைவழிகாட்டுதல்குழுவும் அமைக்கப்படவுள்ளது. மேலும், தரக் கட்டுப்பாட்டுடன் கூடிய மடிக்கணினிகளைக் கொள்முதல் செய்வதை உறுதிசெய்ய தமிழ்நாடு மின்னணு நிறுவனத்துக்கு (எல்காட்) அனுமதி வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் (2011) சுமார் 50 லட்சம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு 'அம்மா மடிக்கணினி திட்டம்' பெயரில் தொடங்கப்பட்டது. திமுக ஆட்சியில் இடை நிறுத்தப்பட்டு மீண்டும் 2025-26 நிதியாண்டில் ரூ.2,000 கோடி மதிப்பில் 20 லட்சம் மாணவர்களுக்கு, 'உலகம் உங்கள் கையில்' பெயர் மாற்றத்துடன் மடிக்கணினி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

விடுபட்ட மாணவர்களுக்கும் மடிக்கணினி

முந்தைய 2025–26–ஆம் கல்வியாண்டில் மடிக்கணினித் திட்டத்தில் விடுபட்ட அரசு, அரசு உதவிபெறும் கலைக் கல்லூரிகள், தொழில்முறைப் படிப்புகளில் பயிலும் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்களும் நிகழாண்டு திட்டத்தில் மடிக்கணினிகள் வழங்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மேலும், பொறியியல் மாணவர்களின் தொழில்நுட்பக் கல்வித் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு இன்டெல் கோர் – ஐ–5 செயலி அல்லது அதற்கு இணையான உயர்தரத் தொழில்நுட்பத்துடன் கூடிய மடிக்கணினிகள் வழங்கப்படும் என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தவெக எம்.எல்.ஏ.விடம் பேரம் பேசிய விவகாரம்: அதிமுக நிர்வாகியிடம் 2-ஆவது நாளாக விசாரணை

மதுரை, நவ. 7: தவெக எம்.எல்.ஏ.விடம் பேரம் பேசப்பட்டது தொடர்பான விவகாரத்தில் அதிமுக நிர்வாகியும், முன்னாள் துணை மேயருமான பி.எம். மன்னனிடம் மதுரை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் இரண்டாவது நாளாக சனிக்கிழமையும் விசாரணை நடத்தினர்.

தவெக ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியாகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க தன்னிடம் ரூ. 15 கோடி முதல் ரூ. 30 கோடி வரை பேரம் பேசப்பட்டதாக அந்தக் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் மதார் பதுருதீன் (எ) முஸ்தபா கடந்த புதன்கிழமை மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதையடுத்து, சட்டப்பேரவை உறுப்பினர் முஸ்தபா அளித்த புகாரின் பேரில், அதிமுக நிர்வாகியும், முன்னாள் துணை மேயருமான பி.எம். மன்னனை மதுரை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்து விசாரணை நடத்தினர். பின்னர், அவர் மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு, சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டார். மேலும், சனிக்கிழமை (நவ. 7) காலை 10 மணிக்கு விசாரணை அதிகாரி முன் முன்னிலையாக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்படி, சனிக்கிழமை மதுரை மத்திய குற்றப் பிரிவு அலுவலகத்தில் பி.எம். மன்னன் விசாரணைக்கு முன்னிலையானார். அப்போது, முஸ்தபாவின் உதவியாளர் கனிராஜாவிடம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட விசாரணையில் கிடைத்த தகவல்கள், முஸ்தபா அளித்த புகாரில் குறிப்பிடப்பட்ட விவரங்கள் அடிப்படையில் போலீஸார் மன்னனிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டு விளக்கங்களைப் பதிவு செய்தனர். சுமார் 4 மணி நேர விசாரணைக்குப் பிறகு, மன்னன் மத்திய குற்றப் பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டார்.

முன்னதாக, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நீதிமன்ற உத்தரவின்படி, விசாரணைக்கு முன்னிலையாகி போலீஸார் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தேன். விசாரணை முறைப்படி நடைபெற்றது. எப்போது விசாரணைக்கு அழைத்தாலும் முன்னிலையாகத் தயாராக உள்ளேன். இந்த வழக்கை சட்டப்படி எதிர்கொள்வேன் என்றார் அவர்.

ஜெம் வீரமணி வழக்கு: விரைவில் குற்றப்பத்திரிக்கை தாக்கல்

சென்னை காவல் துறை

சென்னை, நவ. 7: சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்குகளில், ஜெம் வீரமணி மீது விரைவில் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் என்று சென்னை காவல் துறை தெரிவித்தது.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் ஜெம் கிரானைட்ஸ் நிறுவன உரிமையாளர் வீரமணி மற்றும் அவருக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் சாந்தி, மகேந்திர சிம்ஹன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், இந்த வழக்கு தொடர்பான விடியோவை வைத்திருந்ததாகக் கூறப்படும் கணேசன், வீரமணிக்கு உதவியதாகக் கூறப்படும் நிறுவன மேலாளர் சக்திவேல் மற்றும் கார் ஓட்டுநர்கள் லாசர், பார்த்திபன், பாபு ஆகியோரும் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கில், இதுவரை 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜெம் வீரமணி மீது பாதிக்கப்பட்ட சிறுமிகளின் புகார்களின் அடிப்படையில், இதுவரை 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மொத்தம் 12 சிறுமிகள் தொடர்பான புகார்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழக்கில் தொடர்புடையவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில் 5 பேருக்கு எதிராக 'லுக் அவுட்' நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்த வழக்கில் தொடர்புடையதாக ஜெம் வீரமணி வீட்டின் காவலாளி எண்ணூரைச் சேர்ந்த சீனிவாசன் கடந்த 2-ஆம் தேதி கைது செய்யப்பட்டார்.

மேலும் ஒரு சிறுமி புகார்: ஏற்கெனவே ஜெம் வீரமணி 8 வழக்குகளிலும், சாந்தி 3 வழக்குகளிலும், மகேந்திர சிம்ஹன் 2 வழக்குகளிலும், லாசர் 5 வழக்குகளிலும், கணேசன் 2 வழக்குகளிலும், சீனிவாசன், சக்திவேல், பாபு, பார்த்திபன் ஆகியோர்கள் தலா ஒரு வழக்கிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே பதியப்பட்ட ஒரு வழக்கில், சாட்சியாக இருந்த ஒரு சிறுமி, தானும் எதிரி ஜெம் வீரமணியால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதாகக் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

விரைவில் குற்றப்பத்திரிக்கை தாக்கல்: இதற்கிடையே, போலீஸ் விசாரணையில் லாசர் கொடுத்த தகவலின் அடிப்படையில், பாலியல் வன்கொடுமை குற்றத்துக்கு பயன்படுத்தப்பட்ட வெள்ளை நிற விலை உயர்ந்த சொகுசு காரை போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இதனிடையே, பாதிக்கப்பட்ட ஒரு சிறுமிக்கு ரூ.2 லட்சம் வழங்க நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டுள்ளது. இந்த விவகாரத்தில் பதியப்பட்ட 8 வழக்குகளில் 2 வழக்குகளின் குற்றப்பத்திரிக்கை வரும் வாரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக சென்னை காவல் துறை தெரிவித்துள்ளது.

சின்னமனூர் அருகே பட்டாசுக் கடையில் தீ விபத்து: 4 பேர் காயம்



காமாட்சிபுரத்தில் வெள்ளிக்கிழமை இரவு பட்டாசுக் கடையில் நேரிட்ட தீ விபத்தில் வெடித்து சிதறிய பட்டாசுகள்.

உத்தமபாளையம், நவ. 7: தேனி மாவட்டம், சின்னமனூர் அருகே காமாட்சிபுரத்தில் வெள்ளிக்கிழமை இரவு பட்டாசுக் கடையில் நேரிட்ட தீ விபத்தில் 4 பேர் காயமடைந்தனர்.

சின்னமனூர் அருகேயுள்ள காமாட்சிபுரத்தைச் சேர்ந்தவர் அழகுமுத்து. ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரான இவர், அதே பகுதியில் பூமலைக்குண்டு செல்லும் சாலையில் பட்டாசுக் கடை நடத்தி வருகிறார். ஆண்டுதோறும் பட்டாசு விற்பனை செய்யும் இவர், தீபாவளி நாள்களில் கூடுதல் பட்டாசுகளை கொள்முதல் செய்து விற்பனை செய்வது வழக்கம்.

இதன்படி, நிகழாண்டு தீபாவளியை முன்னிட்டு பல லட்ச ரூபாய் மதிப்பிலான 200-க்கும் அதிகமான பட்டாசு ரகங்களை கொள்முதல் செய்து, கடையின் பின்புறம் உள்ள கிட்டங்கியில் இருப்பு வைத்திருந்தார்.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை கிட்டங்கியில் உள்ள பட்டாசுகளைப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தனர். அப்போது, கிட்டங்கியில் திடீரென தீப்பிடித்து பட்டாசுகள் வெடிக்கத் தொடங்கின. இதையடுத்து, பட்டாசுகள் வாங்க வந்த வாடிக்கையாளர்கள் அங்கிருந்து தப்பியோடினர். எனினும், அங்கு பணியில் ஈடுபட்டிருந்த பெண் உள்பட 4 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்து சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம் பகுதிகளிலிருந்து வந்த தீயணைப்பு, மீட்புப் படை வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

தீ விபத்து நிகழ்ந்த இடத்தை தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவீன் கௌதம் உள்ளிட்டோர் பார்வையிட்டு விசாரணை நடத்தினர். இதுகுறித்து ஓடைப்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மோதலில் தாக்கப்பட்டவர் உயிரிழப்பு: ராமநாதபுரத்தில் உறவினர்கள் சாலை மறியல்



ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன் சனிக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டவர்கள்.

ராமேசுவரம், நவ. 7: ராமேசுவரம் அருகே பாம்பன் பகுதியில் கோயில் திருவிழா தகராறில் தாக்கப்பட்டவர் உயிரிழந்ததையடுத்து, குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி, ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன் அவரது உறவினர்கள் சனிக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் அருகே பாம்பன் கிழக்குவலசை பகுதியில் அமைந்துள்ள சந்தன மாரியம்மன் கோயிலில் அண்மையில் குடமுழுக்கு நடைபெற்றது. இந்த நிலையில், கடந்த 2-ஆம் தேதி மண்டல பூஜையையொட்டி பொங்கல் வைத்து வழிபாடு நடத்துவது தொடர்பாக இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது.

அப்போது, கிழக்கு வலசைப் பகுதியைச் சேர்ந்த முனீஸ்வரன் (57) தாக்கப்பட்டார். இதில் பலத்த காயமடைந்த அவருக்கு பாம்பன் அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர், தீவிரச் சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாம்பன் போலீஸார் 9 பேர் மீது வழக்குப் பதிந்து விசாரித்து வந்தனர். இந்த நிலையில், மருத்துவமனையில் முனீஸ்வரன் உயிரிழந்தார்.

இதையடுத்து, குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி, அவரது உறவினர்கள் ராமநாதபுரம்- மதுரை தேசிய நெடுஞ்சாலையில் சனிக்கிழமை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, அவர்கள் முனீஸ்வரனைத் தாக்கியவர்கள் மீது கொலை வழக்குப் பதிந்து நடவடிக்கை எடுக்கும் வரை உடலை வாங்க மாட்டோம் எனத் தெரிவித்தனர். இந்த மறியலால் அந்தப் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதன் பிறகு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என போலீஸார் உறுதியளித்ததையடுத்து, போராட்டம் கைவிடப்பட்டது. எனினும், குற்றவாளிகளைக் கைது செய்யும் வரை உடலை வாங்க அவர்கள் மறுத்துவிட்டனர்.

அரசுப் பேருந்துகள் நிறுத்தப்படும் நெடுஞ்சாலையோர உணவகங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி

சென்னை, நவ. 7: நெடுஞ்சாலையோரங்களில் அரசுப் பேருந்துகள் நிறுத்தப்படும் உணவகங்களுக்கான (மோட்டல்) மின் ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டது. மேலும், மோட்டல்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

சென்னை, கோவை, சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், திண்டுக்கல் உள்பட பல்வேறு நகரங்களில் இருந்து நீண்ட தூரம், அதாவது 3 மணி நேரத்துக்கு மேல் இயக்கப்படும் பேருந்துகள் நெடுஞ்சாலையில் உள்ள உணவகங்களில் நிறுத்தப்பட்டு பயணிகள் உணவு மற்றும் தேநீர் அருந்த அனுமதிக்கப்படுவார்கள்.

அரசு பேருந்துகள் சில குறிப்பிட்ட உணவகங்களில் மட்டுமே நிறுத்தப்படும். அந்த உணவகங்களுக்கு அரசு மூலம் டெண்டர் விடப்படும். அந்த வகையில் தற்போது, மோட்டல்களுக்கான இ-டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், மோட்டல்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

சுத்தமான கழிப்பறை, தரமான உணவு, இலவச குடிநீர், மொபைல் சார்ஜிங், சிசிடிவி கேமரா மற்றும் பயணிகள் ரேட்டிங் வழங்க கியூஆர் குறியீடு உள்ளிட்ட வசதிகள் கட்டாயம் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அடிப்படை வசதிகள் குறித்து 5-க்கு 2-க்கு கீழ் ரேட்டிங் எனில் 10 நாள்களில் சரிசெய்ய அவகாசம் வழங்கப்படும். அதற்குள் சரி செய்யாமல் தொடர்ந்தால் டெண்டர் முழுமையாக ரத்து செய்யப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பயணிகளின் புகார்கள் மற்றும் அதிகாரிகளின் ஆய்வுகளின் அடிப்படையில், தரமற்ற வகையில் விதிமுறைகளை மீறிச் செயல்படும் நெடுஞ்சாலை உணவகங்களுக்கு ரூ.2,000 முதல் ரூ.10,000 வரை அபராதம் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

நான்குனேரி அருகே 414 கிலோ கஞ்சா தீயிட்டு அழிப்பு

களக்காடு, நவ. 7: திருநெல்வேலி மற்றும் ராமநாதபுரம் சரகங்களில் பல்வேறு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட 414 கிலோ கஞ்சாவை, நான்குனேரி அருகே பாப்பான்குளத்தில் காவல் துறையினர் வெள்ளிக்கிழமை தீயிட்டு அழித்தனர்.

திருநெல்வேலி மாநகரக் காவல் துறை சார்பில் 22 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 41.832 கிலோ கஞ்சா, ராமநாதபுரம் மாவட்டத்தில் 14 வழக்குகளிலும், சிவகங்கை மாவட்டத்தில் 18 வழக்குகளிலும் கைப்பற்றப்பட்ட 372.522 கிலோ கஞ்சா ஆகியவை சேகரிக்கப்பட்டு, பாப்பான்குளம் அடுத்த பொத்தையடியில் உள்ள தனியார் நிறுவனத்தில் தீயிட்டு அழிக்கப்பட்டது.

ராமநாதபுரம் சரக காவல் துறை துணைத் தலைவர் என். மணிவண்ணன், சிவகங்கை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என். சுகுமார், ராமநாதபுரம் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆர். சகாய அன்பரசு உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கனரா வங்கி — சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I

வேது தளம், கனரா டவர்ஸ், 524, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 044 - 2849 6339, 2849 6900. மின்னஞ்சல்: cb2361@canarabank.com

தலைமை அலுவலகம் - பெங்களூரு

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையுடன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) மற்றும் 9 உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை கனரா வங்கி, கீழ் குறிப்பிட்டுள்ள பல்வேறு கிளையின் அதிகாரப்பூர்வ அதிகாரி அவர்கள் சென்னை, சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I க்கு மாற்றப்பட்டு அடையாளப்பூர்வ / மெய்நிலை / ஆக்கப்பூர்வ சுவாதீனம் (Symbolic /Physical / Constructive Possession) செய்துள்ள சொத்துக்களை கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, "உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு", மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 26.11.2026 ஆம் தேதியன்று (காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை (5 நிமிட கால நீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)) விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

வ.எண்.1: சொத்து மீட்பு மேலாண்மை கிளை I : கடன்தாரர் பெயர் & முகவரி: 1) M/s. I K LEATHER EXPORTS, உரிமையாளர் திரு. K.இமாம் அகமது கான், முதல் தளம், 13/2, காட்டூர் சடையப்பன் தெரு, பெரியமேடு, சென்னை – 600003. 2) திரு. இமாம் அகமது கான், எண்.49, காசிம் அலி நகர், நாகல் நகர், குள்ளனம்பட்டி, அடியனூத்து, திண்டுக்கல் – 624003. மேலும் ஒரு முகவரி: 16/6, கோவேலாங் முத்து கிராமணித் தெரு, பெரியமேடு, சென்னை - 600003.

கடன் நிலுவைத் தொகை : 30.09.2026 அன்றுள்ளபடி ரூ.2,05,09,270.49/- அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர இடைநிகழ் செலவுகள்.

சொத்துக்களின் விவரம்: சொத்து 1: திண்டுக்கல் மறு-பிரிவு நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, திண்டுக்கல் வட்டம், பாலகிருஷ்ணாபுரம் கிராமத்தின் சர்வே எண்.706/2, 706/3B இல் உள்ள நிலத்தின் பரப்பளவு 1.81ஏக்கர்களை மனைகளாகப் பிரிக்கப்பட்ட சர்வே எண்.706/2, 706/3B, புதிய சர்வே எண்.706/3B1A இல் அடங்கிய "வெங்கடேஸ்வரா நகர்", மனை எண்.6 இன் பரப்பளவு 1740ச.அடி. எல்லைகள்: வடக்கில்: கிழக்கு மேற்காக சாலை; தெற்கில்: சர்வே எண்.704 இல் உள்ள நிலம்; கிழக்கில்: மனை எண்.7; மேற்கில்: மனை எண்.5; நிலத்தின் திண்டுக்கல் சார்பதிவாளர் அலுவலகம், நாகல்நாயக்கன்பட்டி அலுவலகத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட திரு. இமாம்அஹமத்கான் அவர்களின் பெயரில் அமைந்துள்ள சொத்து. Cersai Id 400023512271.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 12,50,000/- | டேவணித்தொகை ₹ 1,25,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 1,00,000/-

சொத்து 2: திண்டுக்கல் மறு-பிரிவு நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, திண்டுக்கல் வட்டம், அடியனூத்து கிராமத்தின் சர்வே எண்.527/1C, 528/1A, 368இல் உள்ள நிலத்தின் பரப்பளவு 73சென்ட்களை மனைகளாகப் பிரிக்கப்பட்ட சர்வே எண்.368 பகுதியில், இல் அடங்கிய மனை எண்கள்.6, 7 & 8 ஆகியவற்றின் பரப்பளவு 3393ச.அடி. சர்வே எண்.368 பகுதியில் அடங்கிய மனை எண்.6 இன் பரப்பளவு 1073ச.அடி. சர்வே எண்.368 பகுதியில் அடங்கிய மனை எண்.7 இன் பரப்பளவு 1160ச.அடி. சர்வே எண்.368 பகுதியில் அடங்கிய மனை எண்.8 இன் பரப்பளவு 1160 ச.அடி. எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்.368 பகுதி இல் உள்ள நிலம்; தெற்கில்: கிழக்கு மேற்காக 20அடி பொதுச் சாலை; கிழக்கில்: மனை எண்.5பகுதி (மனையின் மேற்கு புறம்); மேற்கில்: சர்வே எண்.368பகுதி இல் உள்ள நிலம்; Cersai Id 400023512272.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 36,00,000/- | டேவணித்தொகை ₹ 3,60,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 1,00,000/-

சொத்து 3: திண்டுக்கல் மறு-பிரிவு திண்டுக்கல் இணை – II சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, திண்டுக்கல் வட்டம், அகரம் கிராமத்தின் சர்வே எண்.2328/6A இல் அடங்கிய பரப்பளவு 2.58 ஏக்கர்களை மனைகளாகப் பிரிக்கப்பட்ட VIP சிட்டி A பிளாக் இல் உள்ள மனைகள். 1) சர்வே எண்.2328/6, மனை எண்.418 இன் பரப்பளவு 1200ச.அடி. எல்லைகள்: வடக்கில் : மனை எண்.419; தெற்கில்: மனை எண்.417; கிழக்கில்: தெற்கு வடக்காக 20அடி சாலை; மேற்கில்: மனை எண்.423; மனை எண்.418 - 1200ச.அடி 2) சர்வே எண்.2328/6, மனை எண்.417 இன் பரப்பளவு 1200ச.அடி. எல்லைகள்: தெற்கில்: மனை எண்.416; கிழக்கில்: தெற்கு வடக்காக 23அடி சாலை; மேற்கில்: மனை எண்.424; வடக்கில் : மனை எண்.418; மனை எண்.418 - 1200ச.அடி. Cersai Id 400023512275.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 9,00,000/- | டேவணித்தொகை ₹ 90,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 1,00,000/-

சொத்து 4: திண்டுக்கல் பதிவு மாவட்டம், நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவு மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பிள்ளையார்நத்தம் கிராமம், நகராட்சி பணியாளர் காலனி சர்வே எண்.85/2B/1A1 இல் அடங்கிய மனை எண்.13 எல்லைகள்: வடக்கில்: மனை எண்.12; தெற்கில்: 20அடி கிழக்கு மேற்காக சாலை; கிழக்கில்: மனை எண்.14; மேற்கில்: 20அடி தெற்கு வடக்காக சாலை. மனை எண். 13 இன் மொத்த விஸ்தீரணம் 2400ச.அடி. Cersai Id 400023512274.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 21,00,000/- | டேவணித்தொகை ₹ 2,10,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 1,00,000/-

சொத்து 5: திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் இணை - I சார்பதிவாளர் அலுவலகம், திண்டுக்கல் வட்டம், சீலப்பாடி கிராமம் சர்வே எண். 541/7A, 7B, 541/4 & 542/1, புதிய சர்வே எண்.541/7A இல் அடங்கிய (பண்ணை சப்பையா வைத்தியார் காலனி) 1) புதிய சர்வே எண்.541/7A1, மனை எண்.26 பகுதி இன் 2087ச.அடியில் மேற்கு புறத்தின் பரப்பளவு 745-1/4ச.அடி. எல்லைகள்: தெற்கில்: 23அடி கிழக்கு மேற்காக சாலை; மேற்கில்: மனை எண்.27; கிழக்கில்: மனை எண்.26பகுதி இன் பரப்பளவு 2087ச.அடியில் 1338-3/4ச.அடி; வடக்கில்: சர்வே எண்.541/2A இல் உள்ள நிலம். 2) புதிய சர்வே எண்.541/7A1, மனை எண்: 27 இன் பகுதியில் உள்ள 2926ச.அடியில் கிழக்கு புறப் பகுதியின் பரப்பளவு 679 1/2ச.அடி. எல்லைகள்: தெற்கில்: 23அடி கிழக்கு மேற்காக சாலை; மேற்கில்: மனை எண்.27 பகுதியின் பரப்பளவு 2926ச.அடி; கிழக்கில்: மனை எண்.26; வடக்கில்: சர்வே எண். 541/2A இல் உள்ள நிலம்; வகை எண்கள் 1 & 2 கூட்டாக பரப்பளவு 1424.3/4ச.அடி. மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம். திண்டுக்கல் இணை -I-சார்பதிவாளர் அலுவலகத்தின் அதிகாரவரம்பிற்குட்பட்டு அமைந்துள்ள இந்த சொத்து திரு. இமாம்அஹமத்கான் அவர்களின் பெயரில் அமைந்துள்ளது. Cersai Id 400023512276.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 45,00,000/- | டேவணித்தொகை ₹ 4,50,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 1,00,000/-

சொத்து 6: திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம் (கிழக்கு), அடியனூத்து கிராமம், புதிய சர்வே எண்.866/1A1A & 3A1A, பழைய சர்வே எண்.866/1, 866/3A இல் அடங்கிய மாருதி நகர் – II, (மனை எண் 15- விஸ்தீரணம் 1440ச.அடி, மனை எண்.37-விஸ்தீரணம் 1520ச.அடி, மனை எண்.38-விஸ்தீரணம் 1504ச.அடி) ஆகியவற்றில் அமைந்துள்ள பரப்பளவு 4464.00ச.அடி காலி மனைகள் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. மனை எண்:15- இன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.14; தெற்கில்: மனை எண்.37; கிழக்கில்: சர்வே எண்.866/4A & 2C இல் உள்ள நிலம்; மேற்கில்: 20அடி வடக்குத் தெற்காக சாலை; மனை எண்கள்: 37 & 38- இன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.15; தெற்கில்: மனை எண்.39; கிழக்கில்: சர்வே எண்.866/4A & 2C இல் உள்ள நிலம்; மேற்கில்: 20அடி வடக்குத் தெற்காக சாலை. Cersai Id 400023512273.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 35,00,000/- | டேவணித்தொகை ₹ 3,50,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 1,00,000/-

வ.எண்.2: ஸ்பென்சர் பிளாசா கிளை: கடன்தாரர் பெயர் & முகவரி: 1. M/s. K S A Leather Exports (பங்குதாரர் நிறுவனம்) எண்.6/11, கோவலாங் முத்து தெரு, பெரியமேடு, சென்னை - 600 003 2. திரு. பயாஸ் அஹமத். K (பங்குதாரர்) எண்.50, அன்னை நகர், வேட்டுப்பட்டி சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002. 3. திரு. சபீர் அஹமத். K (பங்குதாரர்) எண்.50/22, அன்னை நகர், வேட்டுப்பட்டி சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002 4. திருமதி. ரிஸ்வானா பேகம் (திரு. பயாஸ் அஹமத் அவர்களின் வீட்டு கடனின் இணை கடன்தாரர்) எண்.50, அன்னை நகர், வேட்டுப்பட்டி சாலை, பேகம்பூர், திண்டுக்கல் - 624 002

கடன் நிலுவைத் தொகை : 30.09.2026 அன்றுள்ளபடி ரூ. 9,41,62,681.14/- அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட இதர இடைநிகழ் செலவுகள்.

சொத்து 1 இன் விவரங்கள்: (திரு. பயாஸ் அஹமத் அவர்களால் அடமானம் வைக்கப்பட்ட அசையாச்சொத்தின் விளக்கம்) திண்டுக்கல் இணை-II சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், தொட்டனூத்து ஊராட்சி & கிராமத்தின் சர்வே எண்.603/4, புதிய சர்வே எண்.603/4B இல் அடங்கிய இராமசந்திரா நகர், மனை எண்.54 இல் திரு. பயாஸ் அஹமத். K . அவர்களின் பெயரில் அமைந்துள்ள பரப்பளவு 3090.00சதுர அடி விஸ்தீரங்கொண்ட நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, (Cersai Id - 400011516148)

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 81,90,000/- | டேவணித்தொகை ₹ 8,19,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 1,00,000/-

சொத்து 2 இன் விவரங்கள்: (திரு. பயாஸ் அஹமத் அவர்களால் அடமானம் வைக்கப்பட்ட அசையாச்சொத்தின் விளக்கம்) நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகரம் & திண்டுக்கல் மாநகராட்சி, வார்டு எண்.6, பிளாக் எண்.15, T. சர்வே எண்.824 இல் அடங்கிய நிலத்தினை மனைகளாக்கப்பட்ட வேட்டுப்பட்டி சந்தை சாலை இன் வட புறத்தில் அமைந்துள்ள வேட்டுப்பட்டி சாலை (Treasury சாலை), அன்னை நகர், மனை எண்.50 இல் திரு. பயாஸ் அஹமத்.K அவர்களின் பெயரில் அமைந்துள்ள 1828.25சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. (Cersai Id - 400038982941)

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 66,00,000/- | டேவணித்தொகை ₹ 6,60,000/- | ஏலஉயர்வுத்தொகை ₹ 1,00,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி : 18.11.2026 ; நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

மின் ஏல தேதி மற்றும் நேரம் 26.11.2026 காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை (5 நிமிட கால நீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% EMD டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (baanknet) இன் இணையதளத்தில் நேரடியாகவோ அல்லது Challan எடுத்து Challan இல் குறிப்பிட்டுள்ள கணக்கில் RTGS/NEFT மூலமாகவும் 25.11.2026 அன்று மாலை 5 மணிக்குள் செலுத்த வேண்டும்.

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) "E-Auction" இணைப்பினில் தெரிந்து கொள்ளவும் அல்லது கனரா வங்கி, சென்னை, சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I: (தொலைபேசி எண். 044 - 2849 6339, 2849 6900), cb2361@canarabank.com என்ற மின்னஞ்சலில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும் (அல்லது) சேவை முகவர் baanknet (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No.7046612345/ 6354910172/ 8291220220/ 9892219848/ 8160205051, Email: support.baanknet@psballiance.com / support.baanknet@procure247.com).

இந்த சொத்து வங்கியின் அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது மற்றும் ஏல கொள்முதல்தாரர் நிலையான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடுதலாக பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும். 1. சொத்து அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் உள்ளது மற்றும் ஏல கொள்முதல்தாரர் தனது சொந்த முயற்சியிலேயே மற்றும் பொறுப்பில் சொத்தை கொள்முதல் செய்ய வேண்டும். 2. அசல் சுவாதீனத்தை ஒப்படைப்பதற்கு வங்கி பொறுப்பேற்காது. 3. வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உரிமை கோரவதற்கு உரிமை இல்லை. 4. வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் பின்னலத்திற்கு பிறகு மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை (1 முதல் 4 வரை) உறுதிப்படுத்தும் உறுதிமொழி உடன்படிக்கையை உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். 5. விற்பனைக்குப் பிறகு, வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் பிரகடனத்தையும் ஒப்பந்தத்தை சமர்ப்பிக்கத் தவறினால் ஏல டேவணித் தொகை பறிமுதல் செய்யப்படும்.

Portal of E-Auction: https://baanknet.com

தேதி : 05.11.2026
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் (Formerly Known as Equitas Finance Ltd)

பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A பின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) – அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு/திருமதி மூக்கம்மாள் R C/O திரு ராஜேந்திரன் திரு அருணபாண்டி R C/O திரு ராஜேந்திரன் திரு ராஜேந்திரன் P C/O திரு பெருமாள் அனைவரும் வசிக்கும் இடம்: எண் 4/259, பசும்பொன்நகர், வலந்தூர், மதுரை, , வாலந்தூர், மதுரை, தமிழ்நாடு, 625532	மதுரை மாவட்டம், வாலாந்தூர் கிராமம், பசும்பொன் நகர் பகுதியில், செக்கானூரணி சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் பெரியகுளம் பதிவுமாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள, சர்வே எண் 111/12B மற்றும் 111/12B1A1A-ல் அமைந்துள்ள 880 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் அதிலுள்ள கட்டிடமும் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.	ரூ.6,50,000/- ரூ.65,000/- ரூ.10,000/-	28.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEUSLPT0361817 19.08.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.3,04,548/- மேலும் 20.08.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (05.11.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.4,07,298/-

சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, முத்துசெல்வம் 8124246317

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 27.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.